சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 28.03.2018

சாதாரணக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, ஹேவிளம்பி வருடம் மாசி மாதம் 16–ம் நாள் (பிப்ரவரி திங்கள் 28–ம் நாள்:–28.02.2018) புதன் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

சின்னமனூர் நகராட்சியில் மூலதன மான்யநிதி, இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதி 2017–2018ன் கீழ் சாமிகுளத்தில் துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு கட்டிடம் கட்டும் பணி ரூ.250.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை செய்தி மலர் மற்றும் செய்தித்தாள்களில் செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அவர்கள் வாயிலாக விளம்பரம் வெளியிட்ட வகையில் ஆன செலவினம் ரூ.86940/–த்தை அகார்டு அட்வர்டைசிங் ஏஜென்சீஸ், சென்னை என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்ற ஒப்புதலுக்கு.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.3234/2017/இ1).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.2**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 2018–2021ம் ஆண்டு குத்தகை இனமான நெடுஞ்சாலை ஓரங்கள் மற்றும் நகராட்சி தெருக்களில் ஆக்கிரமிப்பு செய்து தினசரி விற்பனை செய்யும் கடைகள் தலைசுமை மற்றும் தள்ளுவண்டியில் விற்பனை செய்பவரிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (ரெகுலர் லாரி சர்வீஸ்தாரர்கள் தவிர) ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு 22.02.2018ம் அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் முன் வைப்புத் தொகை செலுத்தி ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை. 14.03.2018ம் அன்று நடைபெற்ற மறுபொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் முன் வைப்புத் தொகை செலுத்தி ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை. மறு ஒப்பந்தப்புள்ளிக்கு மூன்று நபர்கள் முன் வைப்புத் தொகை செலுத்தி ஒருவர் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்.

எனவே, மேற்கண்ட இனத்திற்கு கீழ்காணும் விவரப்படி முன் வைப்புத் தொகை செலுத்தி ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி ஆண்டுக் கேள்வி ரூபாய் |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.எம்.சுகுமாறன்,<br>த/பெ.எஸ்.முனியாண்டி சேர்வை,<br>அங்குவிலாஸ் ரைஸ்மில் தெரு,<br>வார்டு எண்.22, கஸ்பா ரோடு, சின்னமனூர். | ரூ.401105/– |

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்படி ஏல இனத்திற்கு ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றதில், திரு.எஸ்.எம்.சுகுமாறன் த/பெ.எஸ்.முனியாண்டி என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.401105/– கடந்த மூன்றாண்டு சராசரியை காட்டிலும் ரூ.49071/– (401105–352034=49071) கூடுதலாகவும் கடந்த ஆண்டு உரிமத் தொகையைக் காட்டிலும் ரூ.31762/–(401105–369343=31762) கூடுதலாகவும் உள்ளதால் மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். (ந.க.எண்.5431/2017/அ2).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

## பொருள் எண்.3

சின்னமனூர் நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதனநிதி, குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி, கல்வி நிதி ஆகியவற்றின் 2017–2018ம் நிதி ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடு மற்றும் 2018–2019ம் நிதி ஆண்டிற்கான உத்தேச வரவு / செலவு மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் அளிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

## பொருள் எண்.4

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.ஏ–IV) துறையின் 21.04.2017ம் தேதியிட்ட அரசாணை (பல்வகை) எண்.39இல் மதுரை மண்டலத்தில் உள்ள 19 நகராட்சிகளில் இயங்கும் தெருவிளக்கு அமைப்புகள் குறித்து விரிவான திட்ட அறிக்கைகள் தயார் செய்து மின் சேமிப்பு நடவடிக்கைகள் செயல்படுத்தும் பொருட்டு மூலதன தரத் தணிக்கை (Investment Grade Auditing Street Lighting System) மேற்கொண்டு திறன் தணிக்கை முகமையின் சான்று பெறுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்திற்கு சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மன்றத்தின் அனுமதி பெற சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 27.04.2017 மற்றும் 04.05.2017ம் தேதிகளிட்ட ந.க.எண்.35871/17/இ1 கடிதங்களில் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

மதுரை மண்டலத்தில் உள்ள 19 நகராட்சிகளில் மூலதன தரத் தணிக்கை மேற்கொள்வதற்கு சென்னை M/s TUV SUD South Asia Private Ltd நிறுவனத்துடன் 01.11.2017ம் அன்று ரூ.66.10 இலட்சம் உடன் சரக்கு மற்றும் சேவை வரி சேர்த்து ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அனைத்து நகராட்சிகளிலும் 100 சதவீதம் கள ஆய்வு (Field Survey) முடிக்கப்பட்டுள்ளதுடன் 15.03.2018க்குள் இறுதி வரைவு அறிக்கை பெற முகமையில் சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி சின்னமனூர் நகராட்சிப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 1281 எண்ணம் தெருவிளக்குகளை மூலதன தரத் தணிக்கை (IGA) மேற்கொள்வதற்கு சின்னமனூர் நகராட்சியின் பங்குத் தொகையாக ரூ.231590/–ம் முதல் மற்றும் 2ம் அழைப்பு ஒப்பந்தப்புள்ளி விளம்பரக் கட்டணம் (Tender Advertisement Cost for 1st and 2nd Call) முறையே (ரூ.6608+3648)=ரூ.10256 சேர்த்து ரூ.241846/–ஐ மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் பெயருக்கு காசோலை (அ) கேட்பு காசோலை மூலமாக அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– **1. அரசாணை (பல்வகை) எண்.39 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.ஏ.IV) துறை, நாள்.21.04.2017ல் மூலதன தரத் தணிக்கைக்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதாலும் அதற்காகும் செலவினத்தை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் 27.04.2017 மற்றும் 04.05.2017ம் தேதிகளிட்ட ந.க.எண்.35871/2017/இ1 கடிதங்களில் அனுமதி வழங்கியுள்ளதாலும் ரூ.241846/–ஐ வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.7410/2018/இ2).**

**தீர்மான எண், நாள்**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.5**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான சங்கிலியார் திடலில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (IUDP) கட்டப்பட்டுள்ள வணிக வளாக கடை எண்.23ஐ திரு.மு.பரமசிவம் என்பவர் மாத வாடகை அடிப்படையில் எடுத்து நடத்தி வந்த நிலையில், திரு.மு.பரமசிவம் என்பவருக்கு உடல் நலமில்லாத நிலையில் அவருடைய பங்குதாரர் திரு.து.பாண்டி என்பவர் மேற்படி கடை எண்.23ஐ அதே குத்தகை அடிப்படையில் வாடகைக்கு நடத்துவதற்கு 05.01.2018ம் அன்று மனுச் செய்துள்ளார்.

மேலும் மேற்படி கடைக்கு 12 மாத வாடகை மற்றும் GST தொகையினை முன்வைப்புத் தொகையாகவும் பெயர் மாற்றக் கட்டணம் ரூ.2500/– செலுத்தியுள்ளார் (100 சதுர அடிக்குள்) மேலும் அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03.07.2007 பத்தி எண்.4(V) இன்படி அனுமதியற்ற அனுபோகதாரர்களில் நேர்வில், ஒரு முறை மட்டும் குத்தகை உரிமையை பெயர் மாற்றம் செய்ய அனுமதி வழங்கியுள்ளதால், திரு.து.பாண்டி என்பவருக்கு குத்தகை உரிமையினை பெயர் மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **அரசாணை எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03.07.2007இன்படி அனுமதிக்கலாம். (ந.க.எண்.64/2018/அ2).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.6**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற திட்டப்பணிகள் குறித்து தமிழக அரசின் ஓராண்டு சாதனை குறித்து தினத்தந்தி சாதனை மலரில் விளம்பரம் வெளியிட மாவட்ட ஆட்சித் தலைவர்,தேனி அவர்களின் அலுவலக ந.க.எண்.68/செ.ம.தொ./2018, நாள்.19.03.2018ம் தேதிய கடிதத்தில் அனுமதி வழங்கியதை தொடர்ந்து மேற்கண்ட திட்டப்பணிகள் குறித்து விளம்பரம் வெளியிட்ட வகையில் ஆன செலவினம் ரூ.22050/–ஐ தினத்தந்தி நாளிதலுக்கு வழங்க வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
**1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.1143/2018/இ1).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.7**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 22.03.2018ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் சொத்துவரி கேட்பிற்கு ஏற்றார் போல் குடிநீர் இணைப்புகள் 31.07.2018ம் தேதிக்குள் வழங்கப்படவேண்டுமென (Internal Plumping of Water Supply House service connections) அறிவுறுத்தப்பட்டதன்படி, சின்னமனூர் நகராட்சியில் 13387 சொத்துவரி கேட்பின் எண்ணிக்கையின்படி தற்பொழுது வரை 7881 குடிநீர் இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. மேற்கண்ட பொருள் குறித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் 26.3.2018ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் இந்நகராட்சிக்கு கூடுதலாக 2500 குடிநீர் இணைப்புகள் வழங்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க மேற்கண்ட இணைப்புகளுக்கு மதிப்பீடு ரூ.240.00 இலட்சத்திற்கு தயார் செய்து நிர்வாக அனுமதி வேண்டி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– **மதிப்பீட்டுத் தொகை ரூ.240.00 இலட்சத்தை TUFIDCO நிறுவனம் மூலம் வட்டியில்லா கடனாக பெற்று மேற்கண்ட பணிமேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.8**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட தெருக்களில் குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் நீர் கசிவுகள் மற்றும் உடைப்புகளை சரி செய்யும் பணிக்கு ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 26.03.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. திரு.எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரர் – 0.10 சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.கே.முனிசாமி, ஒப்பந்ததாரர் – 0.30 சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்

அலுவலகக் குறிப்பு:– **மேற்கண்ட பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த (0.10 சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு) திரு.எஸ்.சந்திரன் என்பவரின் ஒப்பந்தத்தை மன்றம் ஏற்கலாம்.**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.9**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யும் பணிகள் பற்றிய விவரங்கள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி அவ்வப்போது மின்னஞ்சல் வழி வரப்பெரும் வழிகாட்டலின்படி Water Supply Ideal Zonation Map Drawing and Existing Ideal Map, A0 Size கலர் பிரிண்ட் போன்றவைகள் குறுகிய காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டிய சூழல் இருந்ததால் விலைப்புள்ளியோ அல்லது ஒப்பந்தப்புள்ளியோ கோரி பணியினை மேற்கொள்ள போதிய கால அவகாசம் இல்லை, வரைபடம் வரைதல், A0 Size, கலர் பிரிண்ட் போன்றவைக்கு ஆகும் செலவினத் தொகையானது இந்நகராட்சியின் பணி ஆய்வர் கு.முத்துக்குமார்அவர்களால் ரூ.32000/– செலவிடப்பட்டுள்ளது. எனவே அதற்கான தொகையினை அவருக்கு வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

**1. அனுமதிக்கலாம்.**

**2. மேற்காணும் செலவினத்தை குடிநீல் நிதியில் வழங்கலாம்.**

**3. அவசர அவசியம் கருதி பணி ஆய்வர் அவர்களால் மேற்காணும் செலவினம் செய்யப்பட்டதை அவருக்கு வழங்கலாம். (ந.க.எண்.0123/2018/இ2).**

**தீர்மான எண், நாள்**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.10**

சின்னமனூர் நகராட்சிப் பகுதியில் சுகாதாரத்தினை பேணிப் பாதுகாக்கும் பொருட்டு பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு, நிர்வாக அனுமதி அரசாணை (3ப) எண்.6, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.02.03.2007இல் ரூ.1016.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளவும், மேலும் திருத்திய நிர்வாக அனுமதி அரசாணை (ப) எண்.19, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.12.2009இன்படி ரூ.1452.00 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ள அனுமதி வழங்கி உத்திரவிப்பட்டது.

மேலும் அரசாணை (பல்வகை) எண்.106, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.01.09.2014இன்படி, நகர்ப்பகுதி மற்றும் கிராமப் பகுதிகளில் நடைமுறைப்படுத்த வழிகாட்டு நெறிமுறைகள் தெரிவித்து உத்திரவிடப்பட்டுள்ளது.

அதன்படி, பாதாள சாக்கடைத் திட்டம் நடைமுறையில் இல்லாத உள்ளாட்சி அமைப்புகளில் சுத்தம் செய்யப்படாத கழிவு நீரினை சுகாதாரமான முறையில் அப்புறப்படுத்தும் பணியினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் 2023ம் ஆண்டிற்கான தொலைநோக்குத் திட்டத்தினை பின்பற்றி, திறந்த வெளியில் அசுத்தமில்லா நகரமாகவும் மற்றும் குப்பைகளில்லா நகரமாகவும் செயல்படுத்தும் பொருட்டு உள்ளாட்சி அமைப்புகள் அருகில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளையும் சுகாதாரமான முறையில் பேண அறிவுறுத்தப்பட்டுள்ளதால், மார்க்கையன்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் 05.03.2018ம் தேதிய ந.க.எண்.29/2016 எண் கடிதத்தின்படி, சின்னமனூர் நகருக்கு அருகில் உள்ள பேரூராட்சிகளில் உள்ள கழிவு நீர் சேமிப்பு தொட்டியினை (Septic Tank) சுத்தம் செய்யும் பணிக்கும், உள்ளூரில் உள்ள கழிவு நீர் தொட்டிகளை சுத்தம் செய்யும் பணிக்கும் கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. உள்ளூரில் வீடுகளில் உள்ள செப்டிக் தொட்டிகளை சுத்தம் செய்யும் பணிக்கு ரூ.2000/– ஒரு தடவைக்கு
2. 20 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ள கிராம ஊராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளுக்கு ரூ.2500/– ஒரு தடவைக்கு

**அலுவலகக் குறிப்பு:–** **அரசாணை எண்.106, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.01.09.2014இல் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, நகராட்சிப் பகுதிக்கு அருகில் உள்ள ஊராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் உள்ள கழிவு நீர் சேமிப்பு தொட்டிகளை சுத்தம் செய்யும் பணியினை மேற்கொள்ள கட்டணங்கள் பெற்று அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******